2003 ஜனவரி 28] [பேரவைத் தலைவர்]

அமருங்கள். உங்களுக்குப் பேச அனுமதி அளிக்கிறேன். *(குறுக்கீடுகள்)* ஏற்கெனவே சொல்லிவிட்டேன். *(குறுக்கீடுகள்)*

திரு. துரைமுருகன்: மைக்கையே போடமாட்டேன் என்கிறார்களே....

திரு. சி. சிவசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கண்ணியமிக்க சட்டப்பேரவையில் தணு, சிவராசனுடைய போலி படத்தை வைத்துக்கொண்டு புரட்சித் தலைவியை ஒரு பெண் என்றும் பாராமல் போலியான கபட நாடகத்தை ஆடியவர்கள்தான் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை *(29-1-2003)* காலை *10-00* மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-29 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

1. 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு சாராவிகள் (மொத்தமாக வழங்குதல்) விதிகளில் திருத்தம் செய்தது குறித்து மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் 6-9-2002 ஆம் நாளிட்ட 193-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

2. 1997 ஆம் ஆண்டு தமிழ்நாடு காபி காய்த் துளைப்பான் (நோய் பரவுதலைத் தடுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல்) விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து வேளாண்மைத் துறையின் 4.6.2002 ஆம் நாளிட்ட 143 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1914 ஆம் ஆண்டு புழு, பூச்சிகள் அழித்தல் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 2/1914) 5 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

3. அறிவிக்கையின் இணைப்பைச் சேர்ந்த நெடும் பத்தி (2)-இல் குறிப்பிடப்பட்டுள்ள, சரக்கு வாகனங்கள் குறித்து 1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வாகன வரி விதிப்புச் சட்டத்தின்கீழ் 1988-89

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

ஆம் ஆண்டிற்கு செலுத்தப்பட்டிருக்க வேண்டிய வரித் தொகையான ரூ. 16,900/- (ரூபாய் பதினாறாயிரத்துத் தொள்ளாயிரம் மட்டும்) தள்ளுபடி செய்தல் குறித்து உள் (போக்குவரத்து-I) துறையின் 7.12.2001 ஆம் நாளிட்ட 1208 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வாகன வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

4. 1988 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் விதிகளில் திருத்தம் செய்தது குறித்து கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் 29.10.2002 ஆம் நாளிட்ட 373 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1983) 180 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

5. 1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுபான (உரிமம் மற்றும் அனுமதி) விதிகளில் திருத்தம் செய்தது குறித்து மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் 12.9.2002 ஆம் நாளிட்ட 194 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

6. 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு வீரியம் குறைந்த சாராவி, மெதில் ஆல்கஹால் மற்றும் வார்னிஷ் (பிரஞ்சு பாலீஷ்) விதிகளில் திருத்தம் செய்தது குறித்து மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் 6.9.2002 ஆம் நாளிட்ட 191 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

7. பாதுகாப்புத் துறை பணியைச் சேர்ந்த ஏலாமையுற்ற படைவீரர்கள், அதிகாரிகள் அவர்களது சொந்தப் பயனுக்காக பயன்படுத்திக் கொள்கின்ற (வாடகைப் போக்குவரத்துக்கு அல்லாத) மோட்டார் வண்டிகளுக்கு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வாகன வரி விதிப்புச் சட்டத்தின்கீழ் செலுத்தத்தக்க வரியிலிருந்து சில நிபந்தனைகளுக்குட்பட்டு, 26.2.2002 அன்றும் அந்நாள் முதற்கொண்டும் விலக்களிப்பது குறித்து உள் (போக்குவரத்து-I) துறையின் 26-2-2002 ஆம் நாளிட்ட 162 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை.

2003 ஜனவரி 28]

[1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வாகன வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/197) 25 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

8. 1988 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 59/1988) 43 ஆம் பிரிவின்கீழ் தற்காலிகமாகப் பதிவு செய்யப்பட்டுள்ள மோட்டார் வண்டிகளைப் பொறுத்தமட்டில் அறிவிக்கையில் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் (1) நெடும்பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள வகைகளைச் சேர்ந்த மோட்டார் வண்டிகளுக்குச் செலுத்தத்தக்க வரி வீதத்தை அதற்கு நிகரான (2) நெடும்பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு குறைப்பது குறித்து உள் (போக்குவரத்து-I) துறையின் 16.10.2002 ஆம் நாளிட்ட 969 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வாகன வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

9. 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு மனநல மருத்துவம் மற்றும் மறுவாழ்வு மையங்களை பதிவு செய்வதற்கான விதிகள் இயற்றியது குறித்து சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறையின் 23-10-2002 ஆம் நாளிட்ட 152 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1995 ஆம் ஆண்டு ஊனமுற்றோர் (இணையான வாய்ப்புகள், உரிமைகள், பாதுகாப்பு மற்றும் முழு பங்கேற்பு) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1996) 73 (4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

10. 2001-2002 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் முப்பத்தி ஏழாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்).

11. 2001-2002 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் முப்பத்தி ஒன்றாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்).

12. 2001-2002 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்தின் இருபத்தி ஒன்றாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்).

[2003 ஜனவரி 28

13. 2001-2002 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் இருபத்தி எட்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்).

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

1. 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆடம்பர வசதிகள் மீதான வரி (இரண்டாம் திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 13/2002).

2. 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 14/2002).

3. 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலத்தடி நீர் (மேம்பாடு மற்றும் மேலாண்மை) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 1/2003).

4. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் ஆளுநர் உரையாற்றும்போது பின்பற்றவேண்டிய ஒழுங்குமுறை பற்றிய புத்தகம். (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

5. 2003 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 23 ஆம் நாள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரை. (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

6. அரசு உறுதிமொழிக் குழுவின் ஏழாவது அறிக்கை. (2002-2003).

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS